**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 303/2024**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 16.10.2025.**

| | |
|---|---|
| **Name : பழனிசாமி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கட்டிநாயக்கன்பட்டியில் குடியிருந்து தறி தொழில் செய்கிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியாது. அ.சா.1 பைனான்சில் வேலை செய்தது மற்றும் பைனான்சில் காணாமல் போனது பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 14.10.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு அ.சா.1 நிதி நிறுவனத்திற்கு வந்து வேலை செய்தார் என்றால் எனக்கு தெரியாது. மதியம் 1 மணிக்கு குமுதவள்ளி மேல் மாடிக்கு சென்ற போது எதிரி படிக்கட்டு வழியாக ஏறி டேபிள் டிராவை திறந்து ரூ.10,000/– திருடிச் சென்றார் என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தை கேள்விப்பட்டு விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**